# அறிமுகம்

## I. *வேதாகம வரலாற்றைப் படிக்க வேண்டியது ஏன்?*

இந்தக் கேள்வி தகுதியான ஒன்றாகவே உள்ளது. ஊழியக்காரர் வேதாகமத்தைப் படிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றார். அதை அவர் தமக்காக அறிந்து கொள்வதும், அதைப் பிறருக்குப் போதிப்பதும் அவரது கடமையாக உள்ளது. கிறிஸ்தவ மக்கள் யாவரும் தங்களின் தனிப்பட்ட மற்றும் சொந்த பக்தி விருத்திக்கான வழிமுறை என்ற வகையில் தங்கள் வேதாகமங்களை வாசிக்க வேண்டும் என்று கூறுப்படுகிறது. ஆனால் கல்லூரிப் பாடத் திட்டத்தில், வேதாகம வரலாறு பற்றிய முறையான பாடத் திட்டம் ஒன்றை ஒரு பாகமாக ஏற்படுத்த வேண்டியது ஏன்?

***1. ஏனென்றால், வேதாகமம் அவ்வளவு பரவலாக அறியப் பட்டுள்ளது.***—கிறிஸ்தவ வட்டாரத்தின் ஒவ்வொரு இல்லத்திலும் இதன் வரலாறுகள் வாசிக்கப்பட்டு திரும்பவும் கூறப்படுகின்றன. இது சபையின் மிக மேன்மையான இடத்தையும், விடுதி, சட்ட சபை கூடும் அறை மற்றும் நீதிமன்ற அவையில் மதிப்பிற்குரிய ஒரு இடத்தையும் பிடித்துள்ளது. இது நமது மாபெரும் நவீன இலக்கியங்களுடன் உள்ளாக இணைவிக்கப்பட்டும் முந்நூறு மொழிகள் மற்றும் வட்டார மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டும்[1] உள்ளது. இது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, உலகில் உள்ள வேறெந்தப் புத்தகத்தைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமான புத்தகங்களை உருவாக்குகிறது. இவ்வளவு மிகவும் பரவலாக அறியப் பட்டும் இவ்வளவு படைப்பாக்கத் திறன் கொண்டதாகவும் உள்ள இப்படிப்பட்ட ஒரு புத்தகமானது சுயாதீனக் கலாச்சாரத்தின் எந்த ஒரு திட்டத்திலும் உள்ளடக்கப்பட வேண்டியதாக இருக்கிறது.

***2. ஏனென்றால் இது அவ்வளவு குறைவாக அறியப்பட்டுள்ளது.***—மனிதர்கள் வேதாகமத்தை வாசிப்பதைக் காட்டிலும் அதிகமாக வேதாகமத்தைப் பற்றி வாசிக்கின்றனர். அவர்கள் அதைப் படிப்பதைக் காட்டிலும் அதிகமாக அதை வாசிக்கின்றனர். அதைப் பற்றிய அவர்களின் அறிவானது மேம்போக்கானதாகவும் சிறு சிறு பகுதிகளானதாகவும் உள்ளது. அவர்கள் அதைப் பற்றிய தெளிவான தொடர்புடைய கண்ணோட்டம் கொண்டிருப்பதில்லை. மாணவர், எகிப்து மற்றும் பெர்ஸியா, கிரேக்கம் மற்றும் ரோம் ஆகியவற்றின் வரலாற்றை வரைக்குறிப்பிடக் கற்பிக்கின்றார். கல்லூரியில் பட்டம் பெற்ற எத்தனை பேர், ஆபிரகாம் அல்லது மோசே அல்லது தாவீது பற்றிய மதிநுட்பமான விவரங்களைத் தரவோ அல்லது இயேசு அல்லது பவுலின் வாழ்வில் நடந்த ஒரு டஜன் உண்மைகளை வரிசை முறைப்படி தரவோ முடியும்?

***3. ஏனென்றால் வேதாகமத்தின் திட்டம் என்பது வரலாற்று ரீதியானது.***—இது தர்க்க ரீதியானதோ அல்லது அறிவியல் ரீதியானதோ அல்ல. இதன் பக்கங்களில் மீட்பு என்பது வரலாற்று ரீதியாக விரித்துரைப் பட்டுள்ளது; அது வரலாற்று ரீதியாக படிக்கப்பட வேண்டும். வேதாகமத் தின் வரலாற்று அமைப்பிலிருந்து துண்டிக்கப்பட்ட ஒரு வசனம், ஒரு உண்மை, ஒரு பாத்திரப் படைப்பு ஆகியவற்றிலிருந்து ஒருவர் நன்மையைப் பெறலாம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை; அதன் தொடர்புகளுடன் மீளக்கட்டுவிக்கப்படும் பொழுது இது இன்னும் எவ்வளவு அதிகமா கின்றது! தலை சிறந்த கலைப்படைப்பொன்று சிறு சிறு துண்டுகளாய் வெட்டப்பட்டு நமது பாராட்டுதலுக்காக துணுக்குகளாய் ஒப்படைக்கப் படுவதைக் கற்பனை செய்து பாருங்கள்; இங்கு ஒரு குத்துச் செடி, அங்கு ஒரு பாறை, மற்றும் இன்னொரு துண்டில் நீலவானத்தின் ஒரு பகுதிப் பட்டை அல்லது அதைத் திரும்பப் பிரதிபலிக்கும் தெளிந்த நீர்க்குட்டை! இவை ஒவ்வொன்றும் தனது சொந்தமான சிறப்புக்களைக் கொண்டுள்ளது என்பதில் ஐயமில்லை, இருப்பினும் கலையின் உன்னத படைப்புக்களை மனிதர்கள் இவ்விதமாய்க் கற்பதில்லை; அவர்கள் ஆவியானவரின் மிக உன்னதமான வெளிப்பாடுகளை இவ்விதமாய்ப் படிக்கக் கூடாது. அவர்களுக்குள், இந்திய அரசியலமைப்புச் சட்டம், நேருவின் கட்டுரைகள் அல்லது காந்தியின் பண்பு ஆகியவை ஊக்கமான படிப்புக்குத் தகுதியான வையாய் உள்ளன என்பதில் ஐயம் எதுவும் இல்லை; வரலாற்றின் நோக்கில் காணும் பொழுது இவை அளவு கடந்த ஆர்வம்மிக்கவைகளாய் உள்ளன. நீங்கள் ஆபிரகாமை அல்லது மோசேயை அல்லது தாவீதை அல்லது பவுலைப் பற்றி அறிந்திருந்தால், நீங்கள் ஆபிரகாமுடனான உடன்படிக்கை, சீனாய் மற்றும் கல்வாரி மலைக் காட்சிகள் அல்லது பெந்தெகொஸ்தேயன்று பிரசங்கம் போன்றவற்றை புரிந்து/அறிந்து கொள்வீர்களென்றால், நீங்கள் அவற்றை மிக உன்னதமான முழுமையின் பாகங்கள் என்ற வகையில் அறிய வேண்டும். வேதாகமமானது வரலாற்று ரீதியாகப் படிக்கப்பட வேண்டும்.

***4. இதன் ஒருமைப்பாட்டை உணர்ந்தறிவதற்காக.***—வேதாகமம் என்பது (ஒரே) ஒரு புத்தகமல்ல; அது பல புத்தகங்களைக் கொண்டுள்ளது. அதன் நாற்பது எழுத்தாளர்களும் தூரத்தின் மிகுந்த விரிவினாலும் காலத்தின் பல நூற்றாண்டுகளாலும் பிரிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் கலாச்சாரத்தின் ஒவ்வொரு படி நிலையிலிருந்தும் வந்தவர்களாக, மேய்ப்பு வேலையாட்கள் மற்றும் மீனவர்களிலிருந்து, அரசவைக் கவிஞர்கள் மற்றும் ஒழுங்குடன் கற்பிக்கப்பட்ட கல்விமான்கள் வரை எல்லாத் தரப்பிலிருந்தும் வந்தவர்களாய் இருந்தனர். (வேதாகமத்தின்) தொகுப்பின் வகையில் வீச்சடம் கூட இதே அளவு பெரியதாய் உள்ளது; வரலாறு, சட்டம், கவிதை, செய்யுள் மற்றும் பாடல், பழமொழி, தீர்க்கதரிசனம், உவமை, உரை, நிருபம், பிரசங்கம், இவை யாவும் இந்த வியப்புமிக்க பக்கங்களில் இடம் பெற்றுள்ளன. மேலும் இந்த நாற்பது எழுத்தாளர்களும் பெரும்பாலும் ஒருவர் மற்றவரின் ஊழியத்தைப் பற்றி அறிந்திராத நிலையிலேயே ஊழியம் செய்தனர்.[2] இருப்பினும் இது ஒரே புத்தகமாய் உள்ளது. அறியாதிருப் பினும், இந்த நாற்பது எழுத்தாளர்களும் உண்மையில் ஆவியில்

ஒருமைப்பாட்டுடனும் நோக்கத்துடனும் பணியாற்றினர். தெய்வீக நோக்கத்தின் அறுபடாத நூலானது, தெய்வீக பலியினால் மனித மீட்புக் கான செவ்வண்ண நூலானது இந்த அறுபத்தியாறு சிறு சிறு நூல்களுக் கிடையே ஓடி இவற்றை ஒன்றாய் இணைக்கின்றது. சிறிது சிறிதாக, காலத்திற்குப் பின் காலமாக நோக்கமானது விரித்துரைக்கப்படுகிறது; "முதலில் இலை, பின்பு கதிர், அதன் பிறகு கதிரில் முழுமையான சோளம்." இந்த உருவகத்தில் கிறிஸ்துவே கண்ணோட்டத்தின் மையக் கருத்தாக இருக்கிறார். இழந்துபோன பரதீசிலிருந்து முன்னோக்கி ஓடி வருகின்ற அல்லது மீண்டும் பெறப்படவிருக்கும் பரதீசிலிருந்து பின்னோக்கி ஓடி வருகின்ற எல்லா குவிய வரிகளும் அவரது சிரசின்மீதுதான் கவிகின்றன. கிறிஸ்து திறவுகோலாய் இருக்கின்றார்; அவரின்றி அனைத்தும் பெரும் குழப்பமாய் உள்ளது; அவருடன் அனைத்தும் kosmos ஆக, வனப்புள்ளதாக, ஒழுங்குள்ளதாக, ஒருமைப்பாடுள்ளதாக இருக்கின்றது.

***5. மனித வரலாற்றின் புத்தகம் என்ற வகையில்.***—தனது சொந்த இனத்தின்/வகையின் வரலாற்றை அறியாதிருக்கிற எவரும் கலாச்சாரத்தை விரிவாக்கும் உரிமைகோருதலை ஏற்படுத்த இயலாது. தனிப்பட்ட நற்பண்புத் தன்மை அல்லது தவறுகளின் மிக உன்னதமான பாடங்கள், எல்லாக் காலங்களின் வளமான இலக்கியங்கள் ஆகியவை வரலாற்றில் பொதியப்பட்டுக் கிடக்கின்றன. வேதாகமமானது பூமியின் மிகவும் குறிப்பிடத்தக்க இனங்களின் ஒன்றான எபிரெயர்களின் தொடக்கம் மற்றும் நல்வாய்ப்புக்கள் ஆகியவற்றை குறிப்பிடத்தக்க முழுமைத்தன்மையுடன் ஆராய்ந்து கண்டறிகின்றது. அவர்களுடைய வரலாற்றின் நூலானது பழங்காலத்தின் ஒவ்வொரு மாபெரும் நாட்டினுடைய நல்வாய்ப்புக் களுடனும் இடை நெசவிடப்பட்டுள்ளது/பின்னிப் பிணைக்கப் பட்டுள்ளது. இவ்விதமாக, கல்தேயா, எகிப்து, அசீரியா, பாபிலோனியா, பெர்ஸியா, மெக்கதோனியா மற்றும் ரோமாபுரி ஆகிய யாவையும் ஒவ்வொன்றாக தொடப்பட்டது.

***6. ஒருவர் வேதாகமத்தின் மீதுள்ள தம் விசுவாசத்தைக் காத்துக் கொள்ள.***—நாம் ஆயிரக்கணக்கில் குழந்தைத்தனமான கருத்துக்களை விட்டு நம்மை வெளியே வளர்த்துக் கொள்கிறோம். பல ஆண்டுகளுக்குப் பிறகு நமது குழந்தைப் பருவத்தின் இல்லத்திற்கு நாம் திரும்பி வருகிறோம். ஒவ்வொன்றும் எவ்வளவாக மாறியுள்ளது! அந்தப் பழைய வீடும், களஞ்சியமும், நாம் விளையாடின அல்லது வேலை செய்த அந்த நிலங் களும், நாம் சுற்றித் திரிந்த அந்த குன்றின் அடிவாரமும், நாம் குளித்த அல்லது மீன் பிடித்த அல்லது சறுக்கு விளையாடின அந்த நீரோடையும், எல்லாமே அளவுகளில் சிறிது சிறிதாய்ச் சுருங்கியுள்ளன. நமது வாழ்வு உள்ளாகவும் புறம்பாகவும் விரிவாகியுள்ளது. குழந்தைப் பருவத்தின் பிற கருத்துக்களுடன், நமது தந்தையின் வேதாகமத்தின் மீதான நமது விசுவாசத்தை நாம் எறிந்து விட்ட அபாயமும் உள்ளது. உண்மையில் நாம் அதை அறியாமல் இருப்பதில் தான் நமது அபாயம் உள்ளது; ஒரு மேன்மை யான அதிமான புரிந்துகொள்ளும் அறிவில்தான் இதற்குப் பரிகாரம் உள்ளது.

## II. வேதாகம வரலாற்றின் குறிக்கோள்

மதரீதியான கருத்தே அடிப்படைக் குறிக்கோளாக உள்ளது. வரலாறு யாவற்றிலும் மதம் என்பது முக்கியமானதாக உள்ளது. இது கலை, கவிதை, சட்டங்கள், பழக்கவழக்கங்கள், இல்வாழ்வு, அடிக்கடி பெரும் யுத்தங்கள் ஆகியவற்றுடன் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இன்னமும் இது ஒரு விதியாக, ஒரு சார்பொருள், துணை நிலையாகவே கருதப்படுகின்றது. அரசியல் ரீதியான மற்றும் மதிநுட்பம் உள்ள வாழ்வு, மாபெரும் பேரரசுகள் அல்லது கட்டிடக் கலையின் மிக மேன்மையான நினைவுச் சின்னங்களைக் கட்டி எழுப்புதல், கலை அல்லது சட்டம் அல்லது இலக்கியத்தின் தலைசிறந்த படைப்புக்களை உருவாக்குதல் - இவை யாவும் முதலிடத்தைப் பெற்றுள்ளன.

இதற்கு நேர்மாறாக, வேதாகம வரலாற்றில், மதரீதியான நோக்க மானது மேலோங்கியுள்ளது. தேவனுடைய மக்கள் தங்கள் அற்புதமான வரலாற்றின் தொடக்கம் முதல் நிறைவு வரையிலும் பழங் காலத்தின் மாபெரும் நாடு ஒவ்வொன்றுடனும் தொடர்பு கொண்டனர் என்பது உண்மையே. வல்லமைக்கு எழும்பிய அவர்களின் அடிச்சுவடுகளிலும், அவர்களின் வீழ்ச்சிக்குக் காரணங்களிலும் இருந்து நாம் சிலவற்றைக் கற்றுக் கொள்ளுகின்றோம். இருந்தாலும் வேதாகமத்தில் பொதுவான வரலாறு என்பது தற்செயலானதாகவே உள்ளது. உண்மையான மதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை அதன் மாபெரும் மூன்று நிலைகளில் - முற்பிதாக்கள், யூதத்துவம் மற்றும் கிறிஸ்தவம் - கண்டறிதல் என்பதே அடிப்படை/முதன்மை நோக்கமாய் உள்ளது. ஒரு மனிதர், வரலாற்றின் மாபெரும் மதம் ஒன்றை நம்பாதிருந்தாலும், அதைப் பற்றிய மதிநுட்பமான கருத்தறிவு இன்றி அவரால் இருக்க முடியாது.

## III. வேதாகம வரலாற்றின் யுகங்கள்

மூன்று தலைசிறந்த நிகழ்ச்சிகள் வேதாகம வரலாற்றின் மூன்று மாபெரும் யுகங்களை அல்லது சகாப்தங்களைக் குறிக்கின்றன. அவைகள்: (1) சீனாய் மலையில் மோசேயின் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுதல்; (2) பெந்தெகொஸ்தே நாளன்று ஆவியானவர் இறங்கி வருதல்; (3) கடைசி அப்போஸ்தலரின் மரணம். இவ்விதமாக இந்த யுகங்கள் பின்வருமாறு விளக்கப்படலாம்:

1. முற்பிதாக்களின் யுகம்,[3] கி.மு. 4004-1491. படைப்பில் இருந்து நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது வரை.

2. யூதத்துவ யுகம், கி.மு. 1491-கி.பி. 30. நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதிலிருந்து பரிசுத்த ஆவியானவர் இறங்கி வரும் வரையில்.

3. கிறிஸ்தவ யுகம், கி.பி. 30-100. ஆவியானவர் இறங்கியதிலிருந்து யோவான் அப்போஸ்தலர் மரித்தது வரை.

குடும்பம் என்பதே - குடும்ப வெளிப்படுத்துதல், குடும்ப மார்க்கம், குடும்ப அரசு - முதல் யுகத்தின் பண்பாக உள்ளது; இரண்டாவது யுகம் என்பது, நாடு - நாட்டு மார்க்கம், நாட்டு உடன்படிக்கை - என்பதைப்

பண்பாகக் கொண்டுள்ளது; மூன்றாவது யுகம் என்பது ஒரு இனத்தை (மனித இனத்தை) - உலகளாவிய மார்க்கம் மற்றும் செய்தியைக் கொண்டுள்ளது. முதல் யுகத்தில் தேவன் முற்பிதாக்களின் மூலமாகக் குடும்பங்களுடன் பேசி வந்தார்; இரண்டாவது யுகத்தில் அவர் மோசேயின் மூலமாக ஒரு நாட்டிற்குப் பேசினார்; மூன்றாவது யுகத்தில் அவர் தம்முடைய குமாரன் மூலமாக உலகம் முழுவதற்கும் பேசுகிறார்.

## IV. பழைய ஏற்பாட்டு வரலாற்றின் காலங்கள்

வரலாற்றின் நிகழ்ச்சிகளை தக்க நோக்கில் பற்றிக் கொள்வதற்கு, ஒருவர் வரலாற்றின் கணுக்களில் ஒரு சிலவற்றின் மீதும் அவற்றின் தேதிகளின் மீதும் உறுதியாய் நிலைத்த கண்ணோட்டமிட்டு அவற்றை உற்று நோக்க வேண்டும். பின்வரும் காலங்களை அதற்குத் தக்கதான ஒவ்வொரு நிகழ்ச்சியையும் எப்பொழுதும் குறிப்பிடும் பழக்கத்துடன் மனப்பாடம் செய்ய செலவிடும் ஒரு மணி நேரமானது வாழ்நாள் முழுவதற்குமான ஊழியத்தை மெய்ப்பிக்கும்.

*1. ஜலப்பிரளயத்திற்கு முந்திய காலம், கி.மு. 4004-2348. படைப்பிலிருந்து ஜலப்பிரளயம் வரை.*

*2. ஜலப்பிரளயத்திற்குப் பிந்திய காலம், கி.மு. 2348-1921. ஜலப்பிரளயத்திலிருந்து ஆபிரகாம் அழைக்கப்பட்டது வரை.*

*3. முற்பிதாக்களின் காலம், கி.மு. 1921-1706. ஆபிரகாம் அழைக்கப் பட்டதிலிருந்து எகிப்துக்கு இடம் பெயர்ந்தது வரை.*

*4. அடிமைத்தனத்தின் காலம், கி.மு. 1706-1491. எகிப்துக்கு இடம் பெயர்ந்ததிலிருந்து வெளியேற்றம் வரை.*

*5. யாத்திரைக் காலம், கி.மு. 1491-1451. வெளியேற்றத்திலிருந்து யோர்தானைக் கடந்து சென்றது வரை.*

*6. வெற்றி கொள்ளுதலின் காலம், கி.மு. 1451-1400. யோர்தானைக் கடந்ததிலிருந்து யோசுவாவின் மரணம் வரை.*

*7. நியாயாதிபதிகளின் காலம், கி.மு. 1400-1095. யோசுவாவின் மரணத்திலிருந்து சவுல் அபிஷேகம் செய்யப்பட்டது வரை.*

*8. ஒன்றுபட்டிருந்த இராஜ்யம், கி.மு. 1095-975. சவுல் அபிஷேகம் செய்யப்பட்டதிலிருந்து ரெகொபெயாம் அரியணை ஏறியது வரை.*

*9. இரண்டு இராஜ்யங்கள், கி.மு. 975-722. ரெகொபெயாம் அரியணை ஏறியதிலிருந்து சமாரியாவின் வீழ்ச்சி வரை.*

*10. யூதா மட்டும், கி.மு. 722-586. சாமாரியாவின் வீழ்ச்சியிலிருந்து எருசலேமின் வீழ்ச்சி வரை.*

*11. சிறையிருப்பின் காலம், கி.மு. 586-536. எருசலேமின் வீழ்ச்சியிலிருந்து செருபாபேலின் கீழ் திரும்ப வருதல் வரை.*

*12. சிறையிருப்பிற்குப் பிந்திய காலம், கி.மு. 536-400. திரும்பி வந்ததிலிருந்து பழைய ஏற்பாட்டுச் சட்ட முடிவு வரை.*

*குறிப்புகள்:*

[1]*இந்தப் புள்ளி விவரமானது 1921 வரையிலான மொழிபெயர்ப்பின் வளர்ச்சி நிலையைப் பிரதிபலிக்கின்றது.* [2]*டீன் இவ்விடத்தில்* "wrought" *என்று எழுதியிருந்தார்.* [3]*தொடக்க கால வேதாகம நாள் அட்டவணை வரிசையானது மிகவும் நிச்சயமற்றதாக உள்ளது.* Ussher *அவர்களுடையது போன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைமை எதுவும் இல்லாத காரணத்தினால், நமது வேதாகமத்தின் பக்க ஓரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது இங்கு தரப்பட்டுள்ளது. யாத்திரை என்பது அநேகமாக நூறு முதல் நூற்று ஐம்பது ஆண்டுகள் பின்புள்ள காலத்திற்குரியதாயிருக்கலாம்.*